සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**Department of Samurdhi Development**

මුදල් අමාත්‍යාංශය

සමෘද්ධි , ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා, ව්‍යාපාර සංවර්ධන හා ඌණ උපයෝජන රාජ්‍ය සම්පත් සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය

நிதி அமைச்சு

**சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழ்ழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

Ministry of Finance

State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment, Business Development and Underutilized State Resources Development


මගේ අංකය
**எனது இல** DSD/HO/05/MF/01/சுற்றறிக்கை
My No

ඔබේ අංකය
**உமது இல** ........................................
Your No

දිනය
**திகதி** 2021.02.18
Date

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றறிக்கை :- **2021/03**

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க நிறைவேற்றுக்குழு /
வங்கிக் கட்டுப்பாட்டு சபை தலைவர்கள், மற்றும்
சகல சமுர்த்தி வங்கி/வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்.

**<u>சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி அங்கத்தவர்களுக்கு மின்சாரம், குடிநீர் மற்றும் துப்பரவு ஏற்பாடு போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான "சமுர்த்தி ஆலோகா" கடன் திட்டத்தை அறிமுகம் செய்தல்.</u>**

01 சமுர்த்தி பயனுகரிகள் உட்பட குறைந்த வருமானம் பெறுவோர்களான வங்கி அங்கத்தவர்களுக்கு 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைய வீட்டுக்கான மின் இணைப்பு வசதியினை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தற்போது வீட்டுக்கான மின் இணைப்பு வசதி இல்லாத குடும்பங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்ஆய்வின் மூலம் தெரிவு செய்யப்படும் பயனுகரிகளுக்கு இலங்கை மின்சார சபையினால் எதிர்காலத்தில் மின் இணைப்பு வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான தயார்படுத்தல்களின் பொருட்டும், வீட்டில் உள்ளக வயரிங் செய்தல் உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகளின் பொருட்டும் ஏற்படும் செலவுகளுக்கு சலுகை வட்டி அடிப்படையில் கடன் தொகை ஒன்றினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் தேசிய நீர்வழங்கல் சபையினூடாக வழங்கப்படும் நீர் இணைப்பினை பெற்றுக்கொள்வதற்கும், மேலும் துப்பரவு ஏற்பாட்டு வசதியினை (மலசல கூட வசதி) விருத்தி செய்துகொள்வதற்கும் தேவையான இக்கடன் வசதியினை வழங்குவதற்கான ஆலோசனைகள் இத்தால் வழங்கப்படுகின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**02 இலக்குக் குழு.**

சமுர்த்தி நலனுதவி பெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் சமுர்த்தி வங்கியின் அங்கத்தவர்கள்.


**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |
| | | **Hot Line :0112-889007** | | | |

03 கடன் வழங்குவதற்கான காரணங்கள், வருடாந்த வட்டி வீதம், உயர்ந்தபட்ச கடன் தொகை, மீளச்செலுத்தும் காலம் மற்றும் பிணை.

| காரணம் | உயர்ந்த பட்ச கடன் (ரூபா) | வருடாந்த வட்டி வீதம் (குறைந்து செல்வும் மீதி முறை) | மீளச் செலுத்தும் காலம் (மாதங்கள்) | பிணை |
|---|---|---|---|---|
| வீட்டு மின் இணைப்புக்கான வயரிங் செய்தல், நீர் இணைப்பு பெற்றுக்கொள்ளல், மற்றும் துப்பரவு ஏற்பாட்டு நடவடிக்கைகளை விருத்தி செய்தல் போன்றவற்றுக்கு. | 20,000/= | 4% | 36 | சிறுகுழுப் பிணை |

04 மாதாந்தம் சமமான தவணை அறவீடுகளை மேற்கொள்ளும் போது இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையினை பயன்படுத்திக்கொள்ள முடியும். கடன் தொகை மற்றும் காலம் என்பன மாற்றமடையும் போது உரிய அட்டவணையில் உள்ள தொகை மற்றும் காலம் என்பன மாற்றம் செய்யப்பட்டு தவணைகளை கணிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

05 கடன் விண்ணப்பப்படிவம் மற்றும் ஏனைய ஆவணங்கள்.
தற்போது நடைமுறையில் உள்ள கடன் விண்ணப்பப்படிவத்தை பாவித்துக்கொள்ள முடியும் என்பதுடன் ஏனைய நடவடிக்கைகளுக்கு தற்போது பாவனையில் உள்ள உரிய ஆவணங்களை பயன்படுத்துதல் வேண்டும்.

06 கடன் அனுமதித்தல் மற்றும் விடுவித்தல்.

I. கட்டுப்பாட்டு சபையின் அனுமதியின் பிரகாரம் கடன் வழங்கப்படல் வேண்டும்.

II. பொது பேரேட்டில் <u>குறியீட்டு இலக்கம் 3128</u> இன் கீழ் பொற்றுக்கொள்ள வேண்டிய கடன் கணக்கு ‘‘சமுர்த்தி ஆலோகா’’ எனும் பெயரில் புதிய கணக்கு ஒன்றினை ஆரம்பித்து கடன் தொகையின் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

III. இக் கடன் வேலைத்திட்டத்தின் பொருட்டு கடன் காப்பீட்டுச் செயற்பாடுகள் சமுர்த்தி வங்கிகளினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

IV. ‘‘சமுர்த்தி ஆலோகா’’ கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் தொகை ஒப்பந்தம் செய்யப்பட்ட பிரகாரம் அறவீடு செய்யப்படல் வேண்டும். இருப்பினும் சமுர்த்தி வங்கிகளை கணனிமயப்படுத்தும் மென்பொருளின் தொழில்நுட்ப தேவை கருதி <u>குறியீட்டு இலக்கம் 3227</u> இன் கீழ் அறவிட முடியாக் கடன் கணக்கு – ‘‘சமுர்த்தி ஆலோகா’’ எனும் பெயரில் கணக்கொன்றினையும் ஆரம்பித்துக் கொள்ளல் வேண்டும்.

07 சமூக அபிவிருத்தி உதவியாளர், வலய உதவியாளர் மற்றும் பிரிவுச் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் இவ் வீடுகளுக்கான உள்ளக மின் இணைப்பு வயரிங் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இத் தொழிலை வழங்கும் நபர்களை (தொழிற் பயிற்சி அதிகாரசபையில் பயிற்சியினை பெற்ற இளைஞர்/யுவதி போன்றவர்கள்) தொடர்பு படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

08 தற்போது மின்சார வசதி இல்லையென அடையாளம் காணப்பட்டுள்ள குடும்பங்களில் வீட்டுக்கு அருகாமையில் (500 மீட்டர் அளவில்) மின்மாற்றி (Transformer) காணப்படுகின்ற சமுர்த்தி பயனுகரிகளுக்கு மின் இணைப்பை பெற்றுக்கொள்வதற்கு தேவையான உள்ளக மின் வயரிங் இணைப்பு நடவடிக்கைகளை விரைவாக முடித்துக்கொள்வதற்கு தேவையான உதவிகளை மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் மூலம் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். இன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இக் கடன் திட்டத்துடன் அவர்களை தொடர்புபடுத்திக் கொள்ள நடவடிக்கை எடுப்பது சமுர்த்தி பயனுகரிகள் முதலாம் கட்டத்திலேயே மின்சாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு உதவியாக அமையும்.

09 இக்கடன் திட்டத்தின் கீழ் 2021.12.31 ஆம் திகதி வரைக்குமே கடன்களை வழங்க முடியும் என்பதையும், ஏனைய அனைத்து நடவடிக்கைகளும் தற்போது நடைமுறையில் உள்ள கடன் தொடர்பான சுற்றுநிருப ஆலோசனைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

10 மின்சார வசதியில்லாத அனைவருக்கும் மின்சாரத்தை வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு தாங்கள் வழங்கும் ஆதரவினை நான் பாராட்டுகிறேன்.

**ஆர்.பி.பீ.திலக்கசிறி**
**பணிப்பாளர் நாயகம்.**

**பிரதிகள்:-**

1. செயலாளர் - சமுர்த்தி,வதிவிடப்பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இரஜாங்க அமைச்சு. -தகவலுக்காக
2. மாவட்ட செயலாளர் / மாவட்ட மேலதிக பணிப்பாளர் நாயகம் -தகவலுக்காக
3. கணக்காய்வு அத்தியட்சகர்,அரச கணக்காய்வு அலகு,சமு.அபி.திணைக்களம் -தகவலுக்காக
4. பிரதம உள்ளக கணக்காய்வாளர், சமு.அபி.திணைக்களம் -தகவலுக்காக
5. மாவட்ட சமுர்த்தி பணிப்பளர் -உ.ந.பொருட்டு
6. பிரதேச செயலாளர்கள் -உ.ந.பொருட்டு
7. கிளைத்தலைவர்கள் , சமு.அபி.திணைக்களம். -உ.ந.பொருட்டு
8. பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர்கள், மாவட்ட செயலகம். -உ.ந.பொருட்டு
9. கண்காணிப்பு முகாமையாளர் / கண்காணிப்பு உத்தியோகத்தர், மாவட்ட செயலகம். -உ.ந.பொருட்டு

Translated by :- I.Aliyar
District Director of Samurdhi - Mannar